மதிப்பீடு

சரி, தவறு, சரி, தவறு, சரி,

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

9PXP88

1. பின்வருவனவற்றுள் எது வழி அளவு?
   (அ) நிறை (ஆ) நேரம்
   (இ) பரப்பு (ஈ) நீளம்
2. பின்வருவனவற்றுள் எது சரி?
   (அ) 1L = 1cc (ஆ) 1L = 10 cc
   (இ) 1L = 100 cc (ஈ) 1L = 1000 cc
3. அடர்த்தியின் SI அலகு
   (அ) கிகி / மீ² (ஆ) கிகி / மீ³
   (இ) கிகி / மீ (ஈ) கி / மீ³
4. சம நிறையுள்ள இரு கோளங்களின் கனஅளவுகளின் விகிதம் 2:1 எனில், அவற்றின் அடர்த்தியின் விகிதம்
   (அ) 1:2 (ஆ) 2:1
   (இ) 4:1 (ஈ) 1:4
5. ஒளி ஆண்டு என்பது எதன் அலகு?
   (அ) தொலைவு (ஆ) நேரம்
   (இ) அடர்த்தி
   (ஈ) நீளம் மற்றும் நேரம்

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஒழுங்கற்ற வடிவமுள்ள பொருட்களின் பருமனை அளக்க ______________ விதி பயன்படுகிறது.
2. ஒரு கன மீட்டர் என்பது ______________ கன சென்டிமீட்டர்.
3. பாதரசத்தின் அடர்த்தி ______________.
4. ஒரு வானியல் அலகு என்பது ______________.
5. ஓர் இலையின் பரப்பை ______________ பயன்படுத்தி கணக்கிடலாம்.

## III. பின்வரும் கூற்றுகள் சரியா தவறா எனக் கூறுக.

1. ஒரு பொருளின் மேற்பரப்பே அதன் கனஅளவு எனப்படும்.
2. திரவங்களின் கன அளவை அளவிடும் முகவை மூலம் அளக்கலாம்.
3. நீர் மண்ணெண்ணெயை விட அடர்த்தி அதிகம் கொண்டது.
4. இரும்பு குண்டு பாதரசத்தில் மிதக்கும்.
5. ஓரலகு பருமனில் குறைந்த எண்ணிக்கையில் மூலக்கூறுகளைக் கொண்ட பொருள் அடர்த்தி அதிகம் கொண்டப் பொருள் எனப்படும்.

## IV. முதல் வரிசையில் உள்ளவற்றை இரண்டாவது வரிசையில் உள்ளவற்றோடு பொருத்துக:

| 1. | வரிசை–1 | வரிசை–2 |
|---|---|---|
| | 1. பரப்பு | (அ) ஒளி ஆண்டு |
| | 2. தொலைவு | (ஆ) மீ³ |
| | 3. அடர்த்தி | (இ) மீ² |
| | 4. கன அளவு | (ஈ) கிகி |
| | 5. நிறை | (உ) கிகி / மீ³ |

| 2 | வரிசை–1 | வரிசை–2 |
|---|---|---|
| | 1. பரப்பு | (அ) கி / செமீ³ |
| | 2. நீளம் | (ஆ) அளவிடும் முகவை |
| | 3. அடர்த்தி | (இ) பொருளின் அளவு |
| | 4. கன அளவு | (ஈ) கயிறு |
| | 5. நிறை | (உ) தள வடிவ பொருள் |

## V. பின்வருவனவற்றை சரியான வரிசையில் எழுதவும்:

1. 1 L, 100 cc, 10 L, 10 cc
2. தாமிரம், அலுமினியம், தங்கம், இரும்பு

மீ³ , இரும்பு 1Kg

## VI. ஒப்புமையைக் கொண்டு நிரப்புக

1. பரப்பு : மீ² :: கன அளவு : ______________
2. திரவம் : லிட்டர் :: திடப்பொருள் : ______________
3. நீர் : மண்ணெண்ணெய் :: ______________ : அலுமினியம்

13600 Kg/m³, 100cm³, நீர் இடப்பெயர்ச்சி, 1.496×10¹¹, வரைபடத் தா